
# சங்கரானந்தம்-26

## 31.05.2026



காஞ்சி மஹாஸ்வாமிகளை போற்றும் பக்திப் பாடல்கள்



தேனுபுரீஸ்வரதாசன் இல. சங்கர்
104, அரவிந்த நகர், மாடம்பாக்கம், சென்னை - 126.
99404 47 437



அத்வைத குருவின் அதிகாலை விஸ்வரூப தரிஸனம்



நமது இரு கண்களால் ஒரு காட்சியை காண்பது போல "உண்டு" என்றும் "இல்லை" என்றும் இரு தரப்பினரும் விவாதிக்கும் ஒருவனை நமக்குணர்த்த ஆன்மீகத்தின் இரு கண்களாக காஞ்சி சங்கர சர்வக்ஞ பீடத்தில் வீற்றிருந்து அருள்வழி காட்டும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி மஹா பெரியவாளையும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி பெரியவாளையும், வணங்கி உற்சவ மூர்த்திகளாக நம் கண் முன்னே உலவி அருள் பொழிந்து கொண்டிருக்கும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி மற்றும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சத்திய சந்திரசேகரேந்திர சரஸ்வதி பெரியவாளையும் மனதார வணங்கி அவர்தம் பாதம் பணிந்து முக்கண்ணனின் அம்சமாய் நமது மூன்றாவது கண்ணான ஞானக்கண்ணை திறக்கும் மஹாசிவ ரூபனான மஹா பெரியவாளின் பேரருளால் உந்தப்பட்டு மலர்ந்த பாடல்களில் சிலவற்றை "சங்கரானந்தம்" என்னும் தொகுப்பாக மஹா ஸ்வாமியின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து மஹா ஸ்வாமியின் பக்தர்களுக்கு மஹாப்ரஸாதமாக இந்நூல் வெளிவந்துள்ளது.

தொழுத கைகளோடு மஹா ஸ்வாமியின்
பழுத்த கோலத்தை காணாது ஏங்கிய என்
அழுத கோலத்தை கண்டு மனமிறங்கி என்னை
எழுது கோலாக ஏற்றருள் புரிந்த
ஏகாம்பர சிவ மஹா பெரியவாளின்
பொற் பாதங்கள் பணிந்து
என்றென்றும் இறையருட் பணியில்,

**தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர்.**

திருமதி. தனுஜா சங்கர் S.கைலாஷ்

## மஹாஸ்வாமிகளின் பேரருளால் ஜெயந்தி மற்றும் ஆராதனை நாளில் இதுவரை வெளிவந்துள்ள பாடல் தொகுப்புகள்

★ சங்கரானந்தம் - 01 வெளியான நாள் : 29.12.2013

★ சங்கரானந்தம் - 25 வெளியான நாள் : 16.12.2025

**சங்கரானந்த கானங்களை**
**www.soundcloud.com / madambakkamshanks**
மற்றும்
**www.soundcloud.com/lakshmikanthan-shankar**
ஆகிய வலைதளங்களில் கேட்டு மகிழலாம்

விலைமதிப்பில்லாத பொக்கிஷத்தைக் கொண்ட இப்புத்தகங்கள் மஹா ஸ்வாமிகளின் பக்தர்களுக்கு இலவசமாக தொடர்ந்து வழங்கிட தங்களால் இயன்ற நன்கொடைகளை வழங்கி குருவருள் பெறுவீர்.

குறைந்தபட்சம் ரூ.100/- அளிப்பவர்களுக்கு இப்புத்தகம் தபாலில் அனுப்பிவைக்கப்படும். தங்கள் பகுதியில் ஆன்மிக நிகழ்ச்சிகளின்பொழுது, தங்கள் இல்லத்தின் திருமணம், உபநயனம், சஷ்டியப்தபூர்த்தி, சதாபிஷேகம் போன்ற விசேஷங்கள் நடைபெறும் பொழுது இப்புத்தகங்களை அச்சு விலையில் பெற்று பக்தர்களுக்கு வழங்கி மகிழ விருப்பம் உள்ளவர்கள் அணுகவும்:


## தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர்

104 அரவிந்த நகர், மாடம்பாக்கம், சென்னை - 600 126.

## ✆ 99404 47 437

**(8.00 - 10.00 pm. only)**


சங்கரானந்த கானங்கள் வருடந்தோறும் மஹா பெரியவாளின் ஜெயந்தி மற்றும் ஆராதனையின்போது மஹாஸ்வாமிகளின் பக்தர்களுக்கு குரு அருட் பிரசாதமாக கிடைப்பதற்கு பல வகையிலும் அன்புள்ளத்தோடு பேராதரவு நல்கி வரும் அனைத்து நல் இதயங்களையும் வணங்கி மகிழ்கிறேன். அவர் தம் குடும்பத்தினர் அனைத்து வளங்களையும் நலன்களையும் பெற்று பல்லாண்டு வாழ மஹா பெரியவாளின் பொற்பாதங்களை பணிகிறேன்.

- தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர்

## ஆதிசங்கர அத்வைதசங்கர
## அனுஷ சங்கரகானம்

### (பூமியில் மானிடஜென்மம் எடுத்துமோர் - மெட்டு)

பூமியில் மானிடஅவதாரம் எடுத்தீரே
தமிழகம் தழைத்திட தயை புரிந்தீரே
வாமியின் தலத்தினில் வாஞ்சையோ டமர்ந்தீரே
யாமிருக்க பயமேனென்று அபயமருளும் சங்கரரே

மாமலை நாதனே கைலாய வாஸனே
மாவடி தலம் வந்த சைலேஸ்வரனே
மாதொரு பாகனே மங்கல சிவனே
மாநகர் காஞ்சியில் அருள்சங் கரனே


Sri Mahaswami at Kanchi Kamakoti Sankara Mutt
Kanchipuram - 1931

மாலயன் போற்றிய மாமலை ஜோதியே
மாதவம் புரிந்திடும் பேரண்ட ஆதியே
மாஞாலம் காத்திடும் காமகோடி ஜோதியே
மாநகர் காஞ்சியில் அமர்ந்தருள் ஆதியே

மான்மழு ஏந்தியே அருள்ஆதி சிவமே
மாசிலா மனமே தந்திடும் தவமே
மாபாவம் போக்கியே அருள்வீர் வரமே
மாநகர் காஞ்சியில் அமர்ந்தருள் பரமே



# பழவினை போக்கிடும் பரமேஸ்வரதிரு மஹாபெரியவாகானம்

## (நீலக் கடலின் ஓரத்தில் - மெட்டு)



சிவ சங்கர குரு பத சரணம்
தவ சங்கர குரு பத சரணம்
நவ நிதி நல்கிடும் பத சரணம்
பவ பயம் போக்கிடும் பத சரணம்

குருவார நாதரே பத சரணம் - ஆலடி
குருநாத திருவே பத சரணம்
குருஸ்வாமி நாதரே பத சரணம் - காஞ்சி
குருஸ்வாமி நாதரே பத சரணம்

அருந்தவத் திருவே பத சரணம்
அருணனாய் வலம் வந்த பத சரணம்
அருள் ஞான ஒளியே பத சரணம்
அருட்குரு நாதரே பத சரணம்

திருக்கயிலை திருவே பத சரணம்
திருக்காஞ்சி வந்திட்ட பத சரணம்
திருக்காட்சி அருளிடும் பத சரணம்
திருவருள் பொழிந்திடும் பத சரணம்



## அனுஷ குரு அக்ஷர மாலை கானம்
## (நாத விந்து கலாதி நமோ நம - மெட்டு)

அனுஷ குருவே அத்வைத திருவே
அனுக்ரஹ குருவே ஆலடி திருவே
அனுதினம் பணிந்திட அருள்வீர் குருவே - மஹா ஸ்வாமி

ஆதிரை நாதனே ஆனந்தக் கூத்தனே
ஆதி சங்கர அவதார திருவே
ஆதி காஞ்சியில் அமர்ந்தருள் குருவே - மஹா ஸ்வாமி

இருவரும் காணா ஈடில்லா ஜோதியே
இருவரோ டருளும் மும்மூர்த்தி ரூபியே
இருள்நீக்கி ஒளிதந்த ஈடில்லா குருவே - மஹா ஸ்வாமி

ஈஸான்ய நாதனே கால காலனே
ஈரேழுலகும் போற்றிடும் ஹரனே
ஈர்த்தாட் கொண்டே வரமருள் குருவே - மஹா ஸ்வாமி

உரு பல கொண்டருள் அஷ்டாஷ்ட ரூபனே
உள்ளொளி பெருக்கிடும் பரஞ்சோதி ரூபனே
உற்ற துணையாய் காத்திடும் குருவே - மஹா ஸ்வாமி

ஊர் தோறும் வலம் வந்த உன்னத குருவே
ஊர் போற்றும் உத்தம சங்கர குருவே
ஊழ்வினை களைந்திடும் ஒப்பில்லா குருவே - மஹா ஸ்வாமி

எண்தோள் ஈஸனே ஆலங்காடனே
எண்திசை காத்திடும் அண்ணா மலையனே
எட்டிரண் டருளியே ஏற்றருள் குருவே - மஹா ஸ்வாமி

ஏரகச் செல்வனே ஸ்வாமி நாதனே
ஏற்றங்கள் அருளும் பூமி நாதனே
ஏற்றருள்வீர் எம் பக்தியை குருவே - மஹா ஸ்வாமி

ஐம்பூத நாதனேஆதி சிவனே
ஐந்தெழுத் தோனே அம்பல வாணனே
ஐஸ்வர்யம் அருளும் சங்கர குருவே - மஹா ஸ்வாமி

ஒப்பில்லா பீடங்கள் ஐந்தினை தந்தவா
ஒரு வழிப் பாதையை உணர்த்திட வந்தவா
ஒரு நூறாண்டு வாழ்ந்திட்ட குருவே - மஹா ஸ்வாமி

ஓதிட ருத்ரமே அருளும் சிவமே
ஓரிக்கை தலம் வந்து அமர்ந்திட்ட பரமே
ஓயாமல் காத்திடும் நடமாடும் தெய்வமே - மஹா ஸ்வாமி

ஔஷதீஸ்வரா கைலாஸ வாஸா
ஔவியம் போக்கிடும் திருக்காஞ்சி ஈஸா - பவ
ஔஷத திருவே அனுஷத்தின் குருவே - மஹா ஸ்வாமி



# குறைகள் தீர்த்தருளும்
# குரு காஞ்சி மாமுனி கானம்

## (ஸ்ரீ நிவாஸா கோவிந்தா - மெட்டு)

பதம் பணிவோம் குரு பதம் பணிவோம்
பற்றில்லா மனம் பெறநிதம் பணிவோம்
பதம் பணிவோம் குரு பதம் பணிவோம்
பரமானந்தமே நிதம் பணிவோம்



அத்வைதம் போதித்த அடி பணிவோம்
ஆனந்தம் உணர்த்திடும் கழல் பணிவோம்
இதம் தரும் புண்ணிய பதம் பணிவோம்
ஈஸாதி ஈஸனை நிதம் பணிவோம்

உண்மையை உரைத்திடும் அடி பணிவோம்
ஊர்தோறும் வலம்வந்த கழல் பணிவோம்
எங்கும் நிறைந்தருள் பதம் பணிவோம்
ஏகம்ப தாஸரை நிதம் பணிவோம்

ஐந்தெழுத் தோனின் அடி பணிவோம்
ஒப்பில்லா அவதார கழல் பணிவோம்
ஓடி வந்தருள் குருபதம் பணிவோம் - பவ
ஔஷத திருவை நிதம் பணிவோம்

# கலங்கி நின்றோர்க் கருள்
# காஞ்சி சங்கர குரு கானம்

## (தெலிசிதே மோட்சமு - மெட்டு)

கலங்கி நின்றோர்க் கருள்பவா கால கால சங்கரா
கவலைகள் தீர்ப்பவா காம தஹன சங்கரா
கழல் பணிந்தோம் சங்கரா காத்தருள்வீர் குருபரா



அனுஷ நாத சங்கராஆதி சிவ சங்கரா
அனவரதம் காப்பவாஆதி பீட சங்கரா
அத்வைத சங்கராஆலடி குரு சங்கரா
அடி பணிந்தோம் பெரியவா ஆதரிப்பீர் குருபரா

அஞ்ஞானம் தகர்ப்பவா ஆத்மஜோதி சங்கரா
அஞ்சி வந்தோர்க் கருள்பவா ஆதுரங்கள் தீர்ப்பவா
அம்மையப்பன் ஆனவா ஆராத் துயர் தீர்ப்பவா
அடி பணிந்தோம் பெரியவா ஆதரிப்பீர் குருபரா

அருவுருவாய் அருள்பவா ஆதி லிங்க ஈஸ்வரா
அர்த்த நாரி ஆனவா ஆதி பரமேஸ்வரா
அறம் பொருளோ டின்பமே அருள் ஸ்ரீ சந்திரசேகரா
அடி பணிந்தோம் பெரியவா ஸ்வாமிநாத சங்கரா



# ஆனந்த வாழ்வருளும் அத்வைத குரு
# மஹா பெரியவா கானம்

## (சின்னஞ்சிறு பெண் போலே - மெட்டு)

அனுஷத்தின் நாயகரே அத்வைத சங்கரரே
ஆதிரையின் சங்கரரே ஆதி குரு சங்கரரே

ஆதி சிவ சங்கரரே ஆலடியின் சங்கரரே
ஆதி குரு சங்கரரே காலடியின் சங்கரரே

ஆதிமலை சங்கரரே ஸ்வாமிமலை ஷண்முகரே
ஆதி பால ஸ்வாமிநாதரே மஹா ஸ்வாமி சங்கரரே

ஆகமங்கள் தந்தவரே ஜெகம் காக்க வந்தவரே
ஆதுரங்கள் தீர்ப்பவரே ஜெகத் குரு சங்கரரே

ஆடல் புரிந் தருள்பவரே தேடல் உணர்ந் தருள்பவரே
ஆழ்மனதை அறிந்தவரே சூழ் துன்பம் தீர்ப்பவரே

ஆலாலமே உண்டவரே காலத்தில் காப்பவரே
ஆறாத்துயர் தீர்ப்பவரே அரவணைத்தே அருள்பவரே



# கழுபிணி போக்கிடும்
# விழுப்புரத்து ஸ்வாமிநாத குரு கானம்


### (பிரம்ம முராரி சுரார்ச்சித லிங்கம் -மெட்டு)

விழுப்புரம் தலத்தினில் உதித்தவா போற்றி
விழுமிய பொருளுணர்த்த வந்தவா போற்றி
விரைந்தருள் ஸ்வாமிநாத குருவே போற்றி - நெஞ்சில்
விதையாய் வளர்ந்தருள் குருவே போற்றி

இக பரம் உணர்த்திடும் திருவே போற்றி
இம்மையில் காத்திடும் குருவே போற்றி
இன்னல்கள் களைந்திடும் திருவே போற்றி - மன
இருள் தனில் ஒளிஅருள் குருவே போற்றி

கிரணமாய் தினமருள் திருவே போற்றி
கிருபா ஸாகர குருவே போற்றி
கிரி எங்கும் அமர்ந்தருள் திருவே போற்றி
கிட்டிட கைலாயம் அருள் குரு போற்றி

சிந்தையில் நிறைந்தருள் சங்கரா போற்றி
சிவகுரு ஆர்யாம்பா சங்கரா போற்றி
சின்மய ஸ்வாமிநாத குருபரா போற்றி
சிவகாஞ்சி நகரமர்ந்த குருவே போற்றி



## சமயத்தில் காத்தருளும்
## காஞ்சி சங்கர குரு கானம்

### (நீ தானா எனை அழைத்தது - மெட்டு)

அனுஷத்தின் நாதரே சங்கரரே
அனுக்கிரஹ நாதரே சங்கரரே
அனுதினம் பணிந்திட அருள்வீரே - (மெய்)ஞான
அனுபவம் பெற்றிட அருள்வீரே

ஆலடி அமர்ந்திட்ட குரு பரனே - திவ்ய
காலடி பிறந்திட்ட சங்கரனே
காலடி எங்கும் பதித்திட்ட சங்கரா - நின்
காலடி தொடர்ந்திட அருள்வீர் குரு பரா

உலகத்தை வலம் வந்த வேலவனே - ஞானத்
திலகமாய் அமர்ந்திட்ட ஸ்வாமிநாதனே
கலவையில் குருவான ஸ்வாமிநாதரே - ஞானக்
கலவையில் கலந்திட்ட பூமிநாதரே

நீலகண்டனே நிர்மல ரூபனே
காலகாலனே காம தஹனனே
கோலமுனியே கழல் பணிந்தோமே
காலமெல்லாம் எமக் கருள்வீர் குருவே



## சங்கடங்கள் தீர்த்தருளும்
## சங்கர குரு சரண கானம்

### (பலுக்கே பங்கார மாயனா -மெட்டு)

கரம் குவித்தோர்க் கருளும் கற்பகமே
- திருக் காஞ்சி நகரில்
காலமெல்லாம் அருளும் அற்புதமே

அண்டங்கள் காத்திடும் அம்பலத்தோனே
அண்டி வந்தோர்க் கருள் ஆனந்த கூத்தனே
ஆண்டியாய் அமர்ந்தருள் ஆதிரையானே
ஆனந்த வாழ்வருள் அபயக் கரத்தனே

அருமறை தந்திட்ட வேதாச்சலனே
அருந்தவத் திருவே ஆலடி நாதனே
ஆழ்மனம் அறிந்தருள் ஆலங்குடியோனே
ஆர்வமோ டணுகிட அருளும் ஐயனே

அப்பனுக் குரைத்திட்ட சுப்ரமணியனே
அறுபடை வீடுடை ஷண்முக நாதனே
ஆதரித் தருள் குரு ஸ்வாமி நாதனே
ஆதியை உணர்ந்திட அருளும் குருவே



## திருக்காஞ்சியில் அமர்ந்தருளும்
## ஆதிசிவ குரு நாதர் மஹா பெரியவா கானம்

### (சித்தமெல்லாம் எனக்கு சிவ மயமே - மெட்டு)

சித்தத்தில் நிறைந்தருளும் குரு சங்கரா - உம்மை
நித்தமும் போற்றிடவே அருள் சங்கரா

கலவையில் உதித்திட்ட அருட்குருவே - மனக்
கவலைகள் தீர்த்திடும் ஜெகத்குருவே
கடந்திட பவக்கடலே அருட்குருவே - நீல
கண்டனாய் அருளும் ஜெகத்குருவே

கல்லாலின் கீழமர்ந்த அருட்குருவே - மனம்
கல்லான மாந்தர்க்கருள் ஜெகத்குருவே
கலங்கி நின்றோர்க்கருளும் அருட்குருவே- இதயக்
கமலத்தில் அமர்ந்தருள்வீர் ஜெகத்குருவே


கம்பை நதிக்கரையின் அருட்குருவே - ஆதி
கர்ம வினை தீர்த்திடும் ஜெகத்குருவே
கனிவோடு செவிசாய்க்கும் அருட்குருவே - உந்தன்
கழல் பணிந்தோர்க் கருளும் ஜெகத்குருவே


Sri Mahaswami at Kanchi Kamakoti Sankara Mutt
Kanchipuram - 1931

# ஷண்முக ஸ்வாமிநாத சங்கர குரு கானம்
## (முதாகராத்த மோதகம் - மெட்டு)


ஷண்முகனாய் வந்திட்ட ஸ்வாமிநாத சங்கரா
ஷண்மதமே தந்திட்ட ஆதி குரு சங்கரா
சண்மார்க்க நெறி உரைக்க வந்திட்ட சங்கரா
சந்ததமும் பதம் பணிவோர்க் கருள் குரு சங்கரா

திருக் காஞ்சி நகரமர்ந்த ஸ்வாமி நாத சங்கரா
குருகாஞ்சி மாமுனியே ஆதி குரு சங்கரா
அருட்காட்சி தந்தருளும் அனுஷ நாத சங்கரா
திருக்காட்சி தந்தருள்வீர் நெஞ்சிலென்றும் சங்கரா




ஆறுமுக வேலவனே ஸ்வாமிநாத சங்கரா
மாறும் உலகில் ஏற்றத்தை உணர்த்தும் குரு சங்கரா
ஆறு வழி உணர்த்த வந்த அத்வைத சங்கரா
மாறும் உலகில் மாறா குரு மஹா ஸ்வாமி சங்கரா

அல்லல் அறுத் தாட்கொள்ளும் ஸ்வாமிநாத சங்கரா
கல்லாலின் கீழமர்ந்த காருண்ய சங்கரா
இல்லை என்றியம்பாதருள் ஈடில்லா சங்கரா
முல்லைப் பூ சிரிப்பால் அருள் மாமுனியே சங்கரா



## சந்திர மௌலீஸ்வர சந்திரசேகர குரு கானம்
## (மங்களாம்பே சம்புராணி - மெட்டு)

சந்திர மௌலீஸ்வரரரே ஸ்ரீ சந்திர சேகரரே
ஸ்வாமிநாத சற்குருவே மஹாஸ்வாமி ஜெகத்குருவே

கண் கண்ட தெய்வம் நீரே காஞ்சியில் அருள் குருவே
கண் மூன்று கொண்டவரே காமாக்ஷி தாசன் நீரே

கண் இமையாய் காப்பவரே கண் துஞ்சாதருள் குருவே
கண் இமைக்கும் நொடியினிலே கலி தீர்க்கும் ஜெகத் குருவே

கண் ஒளியை தந்தவரே ஏகாம்பர சுந்தரரே
கண்ணோர பார்வையினால் விதி மாற்றும் வித்தகரே

கண் இரண்டில் காந்தம் கொண்டே கவர்ந்திழுக்கும் மாமுனியே
கண்ணீரை துடைத்தருளும் திருக்காஞ்சி மாமணியே

சங்காரனந்த கானங்கள் தொடர்ந்து வெளிவர தங்களால் இயன்ற நன்கொடைகளை நல்கி குருவருள் பெறுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**ரூ.100/-** அளிப்பவர்களுக்கு இந்த வெளியீடு தபாலில் அனுப்பப்படும்.

**ரூ.504/-** அளிப்பவர்களுக்கு இதுவரை வெளிவந்த வெளியீடுகள் Pdf / Whatsapp-ல் அனுப்பப்படும்.

**ரூ.1008/-** அல்லது அதற்கு மேல் அளிப்பவர்களுக்கு சமீபத்திய மூன்று வெளியீடுகள் மற்றும் **250** சங்காரனந்த கானங்கள் ஆடியோ - Pen Drive மூலம் தபாலில் அனுப்பப்படும்.

**G-Pay : 99404 47 437**

நன்கொடை அளித்தவர்கள் தங்களின் முகவரி மற்றும் தொகை மேற்கண்ட வாட்ஸ்அப் எண்ணில் தெரியப்படுத்தவும்.

- தேனுபுரீஸ்வர தாசன் இல. சங்கர்


# ஆதிரை நாத அனுஷ குரு கானம்
## (செந்தமிழ் நாடெனும் போதினிலே - மெட்டு)

ஆதிரை நாதனே சங்கரரே - திவ்ய
அனுஷத்தில் உதித்திட்ட சங்கரரே
விசாகத்தில் உதித்திட்ட ஸ்வாமிநாதா - வைகாசி
அனுஷத்தில் உதித்திட்ட பூமிநாதா

நால்வேதம் தந்திட்ட நஞ்சுண்டனே - தேசமெங்கும்
பாதம் பதித்திட்ட குரு பரனே
ஷண்மதம் தந்திட்ட சங்கரரே- காஞ்சியில்
அத்வைதம் உணர்த்திடும் சங்கரரே

ஆறு முகம் கொண்டு வந்திட்டவா - சூரன்
ஆறு முகங்களை வென்றிட்டவா
ஆறு தலைகொண்ட ஸ்வாமிநாதா - அருள்
ஆறுதலை குரு ஸ்வாமிநாதா

எட்டெட்டு உருகொண்டு வந்திட்டவா - காலடியின்
திக்கெட்டும் போற்றிடும் குரு சங்கரா
கிட்டிட மெய்ஞானம் அருள் சங்கரா - கயிலை
எட்டிட அருள்வீர் குரு சங்கரா



# மும்மலங்கள் போக்கிடும்
# மங்கல குரு மஹாஸ்வாமி கானம்

### (மலர்கள் நனைந்தன பனியாலே - மெட்டு)

மலர்விழி காணவே வந்தோமே - அகம்
மலர்ந்திட பணிந்தே நின்றோமே
மலர்முகம் கண்டே மகிழ்ந்தோமே - தாள்
மலர்களை பணிந்தோம் விழியாலே

திருவருள் பொழிந்தருள் தீவண்ணனே - கற்பகத்
தருவாய் வரமருள் சங்கரனே
திருவாய் மலர்ந்தருள் குருபரனே - மௌன
குருவாய் அமர்ந்தருள் சங்கரனே

அருள்மழை பொழிந்தருள் ஆதியனே - என்றும்
அருவியாய் வரமருள் சங்கரனே
அருஉரு திருவாய் அமர்ந்தவரே - நெஞ்சில்
கருவியாய் ஆட்கொண் டருள்குருவே

காருண்யம் பொழிந்தருள் சங்கரனே - ஜீவ
காருண்யம் உணர்த்திட்ட குரு பரனே
பேருண்மை உணர்த்திட வந்தவரே - ஜீவன்
பெருமுக்தி தந்திடும் சங்கரரே




## மங்கலமருள் மஹாஸ்வாமி கானம்
## (சிட்டுக் குருவி சிட்டுக் குருவி - மெட்டு)

மங்கலமருள் சங்கர குரு மஹாபெரியவா - ஆதி
சங்கர அவதார மஹா பெரியவா
சிங்கார ஸ்வாமிநாத மஹா பெரியவா - மன
சங்கடங்கள் தீர்த்தருள்வீர் மஹா பெரியவா

திங்களணிந்த மௌலீஸ்வர மஹா பெரியவா - குளிர்
திங்கள் முகம் கொண்டருளும் மஹா பெரியவா
எங்கும் நடந்த யதி ராஜ மஹாபெரியவா - சேது
கங்கை வரை நடந்தவரே மஹா பெரியவா

மங்களாம்பா காமாக்ஷியே மஹா பெரியவா - சுப
மங்கலங்கள் அருள் குருவே மஹா பெரியவா
மங்காப் புகழ் கொண்டவரே மஹா பெரியவா
மாங்கல்ய வரம் அருளும் மஹா பெரியவா

ஏங்கி நின்றோர்க் கருள் குருவே மஹா பெரியவா - சுமை
தாங்கி அருள் ஜெகத் குருவே மஹா பெரியவா
தங்கி நெஞ்சில் அருள் புரிவார் மஹா பெரியவா - ஞானம்
பொங்கிடவே நமக்கருள்வார் மஹா பெரியவா



## கண் கண்ட தெய்வம்
## கருணா ஸாகரம் காஞ்சி மஹா பெரியவா கானம்

### (ராமச் சந்திராய ஜனக - மங்களம் - மெட்டு)

சந்திர மௌலீஸ்வர குரு ஸ்வாமி நாதரே - மன
சாந்தி தந்தருள் குருவே பூமிநாதரே
சிந்தித்தோர் துயர் தீர்க்கும் மஹா பெரியவா - அருள்வீர்
சீர் அடியை தினம் பணிந்திட மஹா பெரியவா

அத்வைத சற்குருவே மஹா பெரியவா - மன
ஆதங்கம் தீர்த்தருள்வீர் மஹா பெரியவா
இடர் களையும் ஒளிச் சுடரே மஹா பெரியவா - என்றும்
ஈடில்லா ஜெகத்குருவே மஹா பெரியவா

கண் கண்ட தெய்வமே மஹா பெரியவா - எதிர்
காலமறிந் தருள்குருவே மஹா பெரியவா
கிட்டிடவே கயிலாயம் மஹா பெரியவா
கீதை பாதை உணர்த்திட்ட மஹா பெரியவா

சஞ்சலங்கள் தீர்த்தருள்வீர் மஹா பெரியவா
சாந்தரூப சற்குருவே மஹா பெரியவா
சிற்றம்பல சங்கரனே மஹா பெரியவா - வினை
சீற்றங்கள் தீர்த்தருள்வீர் மஹா பெரியவா



## சத் சித் ஆனந்த சங்கர குரு கானம்

### (பிரம்ம முராரி - சுரார்ச்சித லிங்கம் மோகனம் - மெட்டு)

அத்வைத திருவே சாத்வீக குருவே
அத்ரி புத்ர குரு ஸ்ரீ தத்த திருவே
ஆத்ம ஞானமருள் மெய்ஞான திருவே
அத்யந்த சங்கர காமகோடி குருவே



சத் சித் ஆனந்த சங்கர திருவே
சத்திய வழி நடந்த சங்கர குருவே
சாத்வீகம் உணர்த்திடும் சங்கர குருவே
அத்வைத சத்திய சங்கர திருவே

மத்வ மணிமகுட சங்கர திருவே
மத்யார்ஜுன தேர் நகர்த்திய குருவே
மாத்ரு பஞ்சக சங்கர திருவே
அத்வைத சத்திய சங்கர திருவே

தத் புருஷ சிவமே சங்கர குருவே
தத்ரூப ஸ்வாமி நாத சங்கர குருவே
தத்க்ஷணம் அருளும் காமகோடி குருவே
அத்வைத சத்திய சங்கர திருவே



# திருவருள் பொழிந்தருளும்
# திருக்காஞ்சி சங்கர குரு கானம்

## (எளியோரை தாழ்த்தி வலியோரை வாழ்த்தும் - மெட்டு)

சிவசங்கரா காஞ்சி குரு சங்கரா
தவசங்கரா ஆலடி குரு சங்கரா

திருக்காஞ்சி வந்திட்ட கைலாய வாஸனே
திருக்காட்சி தந்தருளும் காமாட்சி தாஸனே
திருக்கரங்கள் காட்டிஅருள் வைகுந்த வாஸனே
திருப்பாதம் நிதம் பணிய அருள் காஞ்சி நேஸனே

திருவாரூர் தேரமர்ந்து அருள் தியாக ராஜனே
திருவரங்க காவிரி ஸ்ரீ ரங்கநாதனே
திருவண்ணாமலையான அருணாச்சலேஸனே
திருமலையில் நின்றருளும் கோவிந்த ராஜனே

திருமடத்தில் அமர்ந்தருளும் அத்வைத சங்கரா
திருநெஞ்சில் குடிகொண்ட சாத்வீக சங்கரா
திருப்பார்வை பார்த்தருள்வீர் மெய்ஞான சங்கரா
திருக்கயிலை சேர்த்தருள்வீர் தெய்வீக சங்கரா



## பாத கமலம் பணிய பாதக மலம் போக்கும் பதசரண கானம்

### (காயத்ரி மந்திரம் - மெட்டு)

கண் கண்ட தெய்வமே பத சரணம் - ஞானக்
கண் திறந் தருள் குரு பத சரணம்
கண் இமைக்காதருள் குரு சரணம்
கண்களில் நிறைந்தருள் குரு சரணம் (ஊன)

அனுஷத்தின் திருவே பத சரணம்
ஆதிசங்கரா பத சரணம்
இக பரம் உணர்த்திடும் குரு சரணம்
ஈடில்லா ஜெகத்குரு பத சரணம்




உறுதுணையாகும் பத சரணம்
ஊறுகள் களைந்திடும் பத சரணம்
என்றும் காத்திடும் பத சரணம்
ஏகம்பன் நிழலமர் பத சரணம்

ஐமுக சதாசிவ பத சரணம்
ஒப்பிலா ஸ்வாமிநாத பத சரணம்
ஓரிக்கை தலம் அமர் பத சரணம்
ஔஷத சாஸ்வத பத சரணம்



# வைகாசியில் உதித்த வைத்தியநாத சிவ மஹா பெரியவா கானம்

## (ஆரத்தி திரைக்கடல் அரசனே - மெட்டு)

ஆரத்தி ஏற்றருள்வீர் மஹா ஸ்வாமி - தீப
ஆரத்தி ஏற்றருள்வீர் காஞ்சி மஹா ஸ்வாமி

வைகாசி விசாக ஸ்வாமி நாதரே
வைகாசி அனுஷத்தின் பூமி நாதரே
வைகரை ஒளியே அத்வைத ஜோதியே
வையகம் காத்திடும் காஞ்சி மஹா ஸ்வாமியே

கைவல்ய திருவே ஸ்வாமி நாத குருவே
கை மேல் பலனருள் பூமிநாத குருவே
கைலாய வாஸனே கனக சபேஸனே
கை குவித்தோர்க் கருள் காஞ்சி மஹா ஸ்வாமியே

ஐ முக சிவமே ஆலடி தவமே
சைவத்தின் சிகரமே அத்வைத பரமே
வைத்திய நாதரே நால் வேத நாதரே
ஐ விரல் அபயமே அருள் காஞ்சி தெய்வமே



# ஆதிஜோதி ஆலடி ஜோதி
# அத்வைத குரு மஹா பெரியவா கானம்

## (நாதர் முடிமேல் இருக்கும் - மெட்டு)

ஆதி ஜோதி ஆத்ம ஜோதி சிவ சங்கரா - ஆலடி
ஆதி குரு ஞான குரு தவ சங்கரா
ஆதி ஸ்கந்த ஸ்வாமி நாத குரு சங்கரா - காலடி
ஆதி குரு சங்கரரே காஞ்சி சங்கரா

தண்டமேந்தி நாடெங்கும் நடந்த தெய்வமே - ஆதி
தண்டபாணி ஸ்வாமிநாத காஞ்சி தெய்வமே
அண்டம் காக்கும் நீலகண்ட ஆதி தெய்வமே - எங்கும்
கண்கண்டதெய்வமாய் நடமாடும் தெய்வமே

கண் மூன்று கொண்டருளும் பரமேஸ்வரனே - ஞானக்
கண் திறந்து மாயை போக்கும் காம தஹனனே
கண் இமைக்கா தமர்ந்தருளும் தியான சிவமே - எங்கும்
கண்கண்ட தெய்வமாய் நடமாடும் தெய்வமே

ஷண்மதங்கள் தந்தவரே ஆதி குருவே - திவ்ய
ஷண்முகனாய் வந்தவரே ஸ்வாமி நாதரே
எண் திசையும் வரம் அருளும் யதி ராஜரே - எங்கும்
கண் கண்ட தெய்வமாய் நடமாடும் தெய்வமே



# குறைகள் களைந்தருளும்
# குரு ஸ்வாமிநாத மஹா பெரியவா கானம்

## (அன்புருவம் ஆனவரே ராக வேந்திரா - மெட்டு)

குரு நாமம் சொல்லிடவே குறைகள் தீருமே
குரு பாத தரிசனமே கோடி புண்ணியமே
குருவின் அருள் கிட்டிடவே வினைகள் தீருமே
குரு காஞ்சி மாமுனியின் பதம் பணிவோமே

அகிலமெங்கும் அமர்ந்தருளும் அத்வைத குருவே
ஆதி சிவ ஆதி சங்கர ஆலடி குருவே
இம்மை மறுமை அறிந்தருளும் ஈடில்லா குருவே
ஈஸ்வர சந்திரசேகர குரு மஹா ஸ்வாமியே

உண்மையின் திருஉருவே மஹா ஸ்வாமியே
ஊர் தோறும் வலம் வந்த மஹா ஸ்வாமியே
எளிமையின் திருஉருவே மஹா ஸ்வாமியே
ஏற்றங்கள் அருள் குருவே மஹா ஸ்வாமியே

ஐயங்கள் களைபவரே மஹா ஸ்வாமியே
ஒப்பில்லா காமகோடி மஹா ஸ்வாமியே
ஓங்கு புகழ் கொண்டவரே மஹா ஸ்வாமியே
ஔஷத நேத்ர தீக்ஷை அருள்வீர் குருவே



## அற்புதங்கள் புரியும் ஆதிரை நாதர்
## அனுஷ குரு கானம்

### (பூமியில் மானிட ஜென்மம் எடுத்துமோர் - மெட்டு)

அனுஷத்தில் பிறந்திட்ட ஆலடி திருவே
ஆதிரையில் உருகொண்ட காலடி குருவே
ஆனந்த ஷண்முக ஸ்வாமிநாத திருவே
அனுக்கிரஹம் புரிந்திடும் திருக்காஞ்சி குருவே

கயிலையில் அமர்ந்தருள் அத்வைத திருவே
காஞ்சியில் அமர்ந்தருள் சாத்வீக குருவே
காருண்ய சங்கர காமகோடி திருவே
கழல் பணிந்தோர்க் கருள் கலியுக குருவே

சந்திர மௌலீஸ்வர லிங்கேஸ திருவே
சாந்மாய் அமர்ந்தருள் சங்கர குருவே
சாம்ப சதாசிவ சர்வேஸ திருவே
சஞ்சலம் போக்கிடும் சச்சிதானந்த குருவே

நற்றமிழ் தலம் உறை நடராஜ திருவே
நாடிவந்தோர்க் கருள் மெய்ஞான குருவே
நால்வேதம் காத்திட வந்திட்ட திருவே
நடமாடும் தெய்வமே திருக்காஞ்சி குருவே



# நம்பினோர்க் கருளும்
# நடமாடும் தெய்வ குரு கானம்

## (நாதர் முடிமேல் இருக்கும் நல்லபாம்பே - மெட்டு)

வேதம் வளர்க்க வந்திட்ட வேத நாதரே - நிந்தன்
பாதம் பணிய அருள்வீரே அனுஷ நாதரே
கீதம் பாடி பணிந்தோமே காஞ்சி நாதரே - நற்
பதம் பெறவே வரமருள்வீர் விஸ்வ நாதரே

ஆதி ஞானப் பரம்பொருளே ஆலடி குருவே - மெய்ஞான
ஆதி பொருள் உணர்த்த வந்த காலடி குருவே
ஆதி ஸ்வாமிநாத குரு கலவை திருவே - முக்தியருள்
ஆதி தலம் வந்தமர்ந்த சங்கர குருவே

ஆறு தெய்வம் உணர்த்த வந்த ஆதி சங்கரா - முகங்கள்
ஆறு கொண்ட ஸ்வாமி நாத குரு சங்கரா
ஆறு கால பூஜை ஏற்கும் நாட்டிய சங்கரா - ஞான
ஆறு சக்ரம் உணர்த்தி அருள் காஞ்சி சங்கரா

ஆயிரம் பிறை கண்ட ஆத்ம ஞானியே - பல்
ஆயிரம் உயிர் காத்த வைத்திய நாதரே
ஆயிரம் யுகம் கண்ட ஆதி சங்கரா - நித்தம்
ஆயிரம் அற்புதமே நிகழ்த்தும் சங்கரா



## நாமம் கோடிகொண்டருளும்
## நமசிவாயசிவசங்கர குரு கானம்

### (ராமச்சந்திராய ஜனக - மெட்டு)

கோடி கோடி நாமம் கொண்ட கோடீஸ்வரனே - காஞ்சி காம
கோடி வந்தமர்ந்த ஸ்வாமி நாதனே
கோடி கோடி தேவர் போற்றும் ஜோதீஸ்வரனே - முப்பத்து முக்
கோடி உயிர் காக்கும் காஞ்சி சங்கரனே

ஆலடியில் அமர்ந்தருளும் ஆனந்த குருவே - மா
ஞாலம் போற்ற வலம் வந்த மெய்ஞான திருவே
காலடியில் உதித்து வந்த சங்கர குருவே - மா
ஞாலம் போற்றும் மஹா ஸ்வாமி மங்கல திருவே

கால கால சங்கரனே திருக்கடையூர் திருவே - மனம்
கலக்கங்கள் தீர்த்தருளும் காஞ்சியின் குருவே
ஆலகால விஷமுண்ட ஆதிரை திருவே - மனம்
கலங்கி வந்தோர்க் காறுதலே அருளும் குருவே

நிலம்நீர் வான் காற்றான ஜோதி ரூபமே - பஞ்ச குரோச
தலம் அமர்ந்து வரமருளும் விஸ்வரூபமே
குல குருவே ஜெகத் குருவே காஞ்சி சங்கரா - முக்தி
தலம் காஞ்சியில் வர மருளும் ஆதி சங்கரா



## சங்கரானந்தம் 26

மஹா பெரியவாளின் பேரருளால் 1300-ற்கும் மேற்பட்ட சங்கரானந்த கானங்கள் மலர்ந்து தங்களின் கரங்களில் இன்று இந்த 26வது தொகுப்பு மஹா ஸ்வாமியின் அருட் பிரசாதாமாக தங்களை வந்தடைந்துள்ளது.

இப்பாடல்களை சிறுவர் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் எளிதில் புரிந்து மனமாறபாடி மகிழும் வகையில் எளிய சொற்களால் மஹா பெரியவா அடியேனை எழுத வைத்துள்ளார்.

இப்பாடல்களை அனுஷம் தோறும் குருவாரம் தோறும் பாடி அகமகழிந்து அத்வைத குருவின் அருளை பெறலாம். இப்பாடல்களின் ஆடியோவை பெற்றிட அடியேனுடன் whatsapp group-ல் இணைந்து கொள்ளவும்.

அனுஷ பூஜை செய்பவர்கள், பக்திப் பாடல்களை மற்றவர்களுக்கு பயிற்றுவிக்கும் பாட்டு டீச்சர்கள் ஆகியோர் தங்களது முகவரியை தெரிவித்தால் அடியேன் தங்களுக்கு தேவையான அளவு பிரதிகளை தபாலில் அனுப்பிவைக்க கடமைப் பட்டுள்ளேன்.

மஹா பெரியவாளின் மஹிமைகளை மனதார பாடி மகிழ்வோம்
மஹா பெரியவாளின் பேரருள் பெற்று பெருவாழ்வு வாழ்வோம்
பெரியவா சரணம்..

இவண்,
தேனுபுரீஸ்வரதாசன் இல. சங்கர்
99404 47 437

### சங்கரானந்தம்

இது வரை சற்றேறக்குறைய 1300 பாடல்களுக்கு மேல் எழுத வைத்துள்ள காஞ்சி மஹாஸ்வாமி, 25 சங்கரானந்த தொகுப்புகளை மஹா பெரியவாளின் பக்தர்களுக்கு அருட்பிரசாதமாக 2,00,000 பிரதிகளுக்கு மேல் வழங்கி அடியேனை அகமகிழச் செய்துள்ளார். மஹா பெரியவாளின் அத்யந்த பக்தர்களின் பொருளுதவியால் இப்பெரும் புண்ணிய குரு கைங்கர்யம் அமோகமாக நடைபெற்றுக்கொண்டுள்ளது. அடுத்து சங்கரானந்தம் - தொகுப்பு 27 வெளிவர தங்களால் இயன்ற பொருளுதவி செய்து குரு கைங்கர்யத்தில் பங்குபெறுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.


ஊர் கூடி தேர் இழுத்தல் போல
பலர் கூடி மஹாபெரியவாளின் மஹிமைகளை போற்றும் சங்கரானந்த தேரை
மலர் தூவி வரவேற்று அனைவரது இல்லத்திலும் சேர்த்து
பலர் மனமகிழ்ந்து அகம்குளிரச் செய்வோம் வாரீர். . .

என்றென்றும் குரு கைங்கர்யத்தில் திளைத்து, திருப்பாதம் பணிந்து

**தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர், 99404 47 437.**

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
# ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி மஹாஸ்வாமிகள்
# அஷ்டோத்திர சத நாமாவளி

ஓம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதீஸ்வராய நம:
ஓம் ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி குருப்யோ நம:
ஓம் ஸன்யாஸாஸ்ரம சிகராய நம:
ஓம் காஷாய தண்ட தாரிணே நம:
ஓம் ஸர்வபீடாபஹாரிணே நம:
ஓம் ஸ்வாமிநாத குரவே நம:
ஓம் கருணாஸாகராய நம:
ஓம் ஜகதாகர்ஷண சக்திமதே நம:
ஓம் ஸர்வ சராசர ஹ்ருதயஸ்தாய நம:
ஓம் பக்த பரிபாலக ஸ்ரேஷ்டாய நம:
ஓம் தர்ம பரிபாலகாய நம:
ஓம் ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வத்யாசார்யாய நம:
ஓம் ஸ்ரீ விஜயேந்த்ர ஸரஸ்வதி பூஜிதாய நம:
ஓம் சிவ சக்தி ஸ்வரூபகாய நம:
ஓம் பக்த ஜன ப்ரியாய நம:
ஓம் ப்ரம்ம விஷ்ணு சிவைக்யஸ்வரூபாய நம:
ஓம் காஞ்சீ க்ஷேத்ர வாஸாய நம:
ஓம் கைலாஸ சிகர வாஸாய நம:
ஓம் ஸ்வதர்ம பரிபோஷகாய நம:
ஓம் சாதுர் வர்ண்ய சம்ரக்ஷகாய நம:
ஓம் லோக ரக்ஷண ஸங்கல்பாய நம:
ஓம் ப்ரஹ்ம நிஷ்டாபராய நம:
ஓம் ஸர்வ பாப ஹராய நம:
ஓம் தர்ம ரக்ஷண ஸந்துஷ்டாய நம:
ஓம் பக்தார்ப்பித தன ஸ்வீகர்த்ரே நம:
ஓம் ஸர்வோபநிஷத் ஸாரஞ்ஞாய நம:
ஓம் ஸர்வ சாஸ்த்ர கம்யாய நம:
ஓம் ஸர்வ லோக பிதாமஹாய நம:
ஓம் பக்தாபீஷ்ட ப்ரதாயகாய நம:
ஓம் ப்ரம்மண்ய போஷகாய நம:
ஓம் நானாவித புஷ்பார்ச்சித பதாய நம:
ஓம் ருத்ராக்ஷ கிரிட தாரிணே நம:
ஓம் பஸ்மோத் தூளித விக்ரஹாய நம:
ஓம் ஸர்வக்ஞாய நம:
ஓம் ஸர்வ சராசர வ்யாபகாய நம:
ஓம் அநேக சிஷ்ய பரிபாலகாய நம:
ஓம் மனஸ் சாஞ்சல்ய நிவர்த்தகாய நம:





ஓம் அபய ஹஸ்தாய நம:
ஓம் பயாபஹாய நம:
ஓம் யக்ஞ புருஷாய நம:
ஓம் யக்ஞாநுஷ்டான ருசிப்ரதாய நம:
ஓம் யக்ஞ ஸம்பன்னாய நம:
ஓம் யக்ஞ ஸஹாயகாய நம:
ஓம் யக்ஞ பலதாய நம:
ஓம் யக்ஞ ப்ரியாய நம:
ஓம் உபமான ரஹிதாய நம:
ஓம் ஸ்படிக துளஸீ ருத்ராக்ஷ ஹார தாரிணே நம:
ஓம் சாதுர்வர்ண்ய ஸமத்ருஷ்டயே நம:
ஓம் ருக் யஜுஸ் ஸாமாதர்வண சதுர்வேத ஸம்ரக்ஷகாய நம:
ஓம் தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபாய நம:
ஓம் ஜாக்ர ஸ்வப்ன ஸுஷுப்தயவஸ்தாதீதாய நம:
ஓம் கோடி ஸூர்யதுல்ய தேஜோமய சரீராய நம:
ஓம் ஸாதுஸங்க ஸம்ரக்ஷகாய நம:
ஓம் அச்வகஜ கோ பூஜா நிர்வர்த்தகாய நம:
ஓம் குருபாதுகா பூஜா துரந்தராய நம:
ஓம் கனகாபிஷிக்தாய நம:
ஓம் ஸ்வர்ண வில்வதள பூஜிதாய நம:
ஓம் ஸர்வ ஜீவ மோக்ஷதாய நம:
ஓம் மூகவாக்தான நிபுணாய நம:
ஓம் நேத்ர தீக்ஷாதானாய நம:
ஓம் த்வாதச லிங்க ஸ்தாபகாய நம:
ஓம் கான ரஸஞ்ஞாய நம:
ஓம் ப்ரஹ்ம ஞானோபதேசகாய நம:
ஓம் ஸகல கலா ஸித்திதாய நம:
ஓம் சாதுவர்ண்ய பூஜிதாய நம:
ஓம் அநேகபாஷா ஸம்பாஷண கோவிதாய நம:
ஓம் அஷ்ட ஸித்திப்ரதாயகாய நம:
ஓம் ஸ்ரீ சாரதா மட ஸுஸ்திதாய நம:
ஓம் நித்தியான்னதான ஸுப்ரீதாய நம:
ஓம் ப்ரார்த்தனாமாத்ர ஸுலபாய நம:
ஓம் பாதயாத்ரா ப்ரியாய நம:
ஓம் நானாவிதமத பண்டிதாய நம:
ஓம் சுருதி ஸ்ம்ருதி புராணஞ்ஞாய நம:
ஓம் தேவ யக்ஷ கின்னர கிம்புருஷ பூஜ்யாய நம:
ஓம் ஸ்ரவணானந்தகர கீர்த்யே நம:
ஓம் தர்சனானந்தாய நம:
ஓம் அத்வைதானந்த பரிதாய நம:
ஓம் அவ்யாஜ கருணா மூர்த்தயே நம:




ஓம் சைவ வைஷ்ணவாதி மான்யாய நம:
ஓம் சங்கராசார்யாய நம:
ஓம் தண்ட கமண்டலு ஹஸ்தாய நம:
ஓம் வீணாம்ருதங்காதி ஸகலவாத்யநாத ஸ்வரூபாய நம:
ஓம் ராமகதா ரஸிகாய நம:
ஓம் வேத வேதாங்க ஆகமாதி ஸகல கலா ஸதஸ் ப்ரவர்தகாய நம:
ஓம் ஹ்ருதய குஹாசயாய நம:
ஓம் சதருத்ரீய வர்ணித ஸ்வரூபாய நம:
ஓம் கேதாரேஸ்வர நாதாய நம:
ஓம் அவித்யா நாசகாய நம:
ஓம் நிஷ்காம கர்மோபதேசகாய நம:
ஓம் லகுபக்திமார்கோபதேசகாய நம:
ஓம் லிங்கஸ்வரூபாய நம:
ஓம் ஸாலக்ராம ஸூக்ஷ்மஸ்வரூபாய நம:
ஓம் காலட்யாம் சங்கர கீர்த்திஸ்தம்ப நிர்மாண கர்த்ரே நம:
ஓம் ஜிதேந்த்ரியாய நம:




ஓம் சரணாகதவத்ஸலாய நம:
ஓம் ஸ்ரீ சைல சிகரவாஸாய நம:
ஓம் டமருகநாத விநோதனாய நம:
ஓம் வ்ருஷபாரூடாய நம:
ஓம் துர்மதநாசகாய நம:
ஓம் ஆபிசாரிகதோஷஹர்த்ரே நம:
ஓம் மிதாஹாராய நம:
ஓம் ம்ருத்யுவிமோசன சக்தாய நம:
ஓம் ஸ்ரீ சக்ரார்ச்சன தத்பராய நம:
ஓம் தாஸானுக்ரஹ காரகாய நம:
ஓம் அனுராதா நக்ஷத்ர ஜாதாய நம:
ஓம் ஸர்வலோக க்யாத சீலாய நம:
ஓம் வேங்கடேஸ்வர சரணபத்மஷ்டபதாய நம:
ஓம் ஸ்ரீ த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திமௌலீஸ்வர பூஜாப்ரியாய நம:

இதி ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதீஸ்வர ஜெகத்குரு சந்திர சேகரேந்திர சரஸ்வதி அஷ்டோத்திர சத நாமாவளி சம்பூர்ணம்.







பாதக மலங்களை போக்கும்
பாத கமலங்களை பணிவோம்

# சங்கரானந்தம்-26

## 31.05.2026

